பக்கங்கள்: 07
காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 13 வெள்ளிக்கிழமை 29.07.2022 கதிர் 155

# 2 சகோதரிகளை மோதியது ரயில்

## ஒருவர் சாவு; மற்றவர் காயம்

கொழும்பு, வெள்ளவத்தையில் ரயிலில் மோதுண்டு 20 வயதுடைய பெண் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் அவரது சகோதரி காயமடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளவத்தை பொலிஸ்

☞2

# கோட்டாவின் கொடியைத் திருடி படுக்கை விரிப்பாக்கியவர் கைது



ஜனாதிபதி மாளிகைக்குள் கடந்த 9ஆம் திகதி பிரவேசித்து, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இலட்சினைக் கொடியைத் திருடி படுக்கை விரிப்பாகப் பயன்படுத்தி, சமூக வலைத்தளத்தில் காணொலியைப் பகிர்ந்திருந்த நபர், பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

☞2

# அமைதி வழிப் போராட்டத்தை மதிக்கின்றேன்; வன்முறையாளர்களை மன்னிக்கவே முடியாது

## கைது நடவடிக்கை தொடர்பில் ரணில் கருத்து



அமைதி வழியில் போராட்டம் செய்தவர்களுக்கு எதிராக எந்தவித நடவடிக்கைகளையும் எடுக்க முடியாது. அமைதிவழிப் போராட்டக்காரர்களை நான் அன்றும் மதித்தேன்; இன்றும் மதிக்கின்றேன். ஆனால், போராட்டம் என்ற பெயரில் பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தவர்களையும், அரச கட்டடங்களுக்குள் நுழைந்து பொருள்களைத் திருடியவர்களையும் மன்னிக்க முடியாது.

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

☞2

# அவசரகாலச் சட்டத்துக்கு எதிராக உயர்நீதிமன்றில் மனுத் தாக்கல்!

## சட்டத்தரணி அம்பிகா அதிரடி



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பிரகடனப்படுத்தப்பட்டு நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள அவசரகால ஒழுங்குவிதிகளைச் சவாலுக்கு உட்படுத்தி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அது தொடர்பான வர்த்தமானியை வலுவிழக்கச் செய்வதற்கான உத்தரவைப் பிறப்பிக்குமாறு கோரி இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளரான சட்டத்தரணி அம்பிகா சற்குணநாதன் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளார்.

☞2

# ராஜபக்ஷக்களை விரட்டியடிப்பதற்கு திட்டம் தீட்டிய சக்திகளைத் தெரியும்

## காலம் ஒரு நாள் பதில் சொல்லும் என்கிறார் மஹிந்த



அதியுயர் பதவிகளில் இருந்து ராஜபக்சக்கள் விரட்டியடிக்கப்படும் போராட்டத்துக்குத் திட்டம் தீட்டிய உள்நாட்டு, வெளிநாட்டுச் சக்திகளை எனக்குத் தெரியும். எனினும், நான் அமைதியாகவே இருக்கின்றேன். உண்மைகள் ஒருநாள் வெளிச்சத்துக்கு வரும். காலம் ஒரு நாள் பதில் சொல்லியே தீரும்.

☞2

# நாடாளுமன்றக் குழுக்களின் தலைமைப் பதவி எதிரணிக்கு

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் 3ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 3ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஆரம்பித்துவைக்கப்படும்.


2 ஆவது கூட்டத்தொடர் நேற்று நள்ளிரவுடன் இடைநிறுத்தப்பட்டுள்ளதால், நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு, நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு, சபைக் குழு உட்ட முக்கியமான 11 குழுக்கள் செயலிழந்துவிட்டன.

மேற்படி 11 குழுக்களில் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு (கோபா), அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்), அரச நிதி பற்றிய குழு என்பன முக்கியத்துவம்மிக்கவை.

☞2

# சிறையிலுள்ள அப்பாவிகளுக்கு விரைவில் விடுதலை கிடைக்கும்

## இது அரசியல் கைதிகளுக்கும் பொருந்தும் என்கின்றது அரசு



சிறைச்சாலைகளில் அப்பாவிகள் தடுத்துவைக்கப்பட்டிருந்தால் அவர்கள் விரைவில் விடுதலை செய்யப்படுவார்கள். இது அரசியல் கைதிகளுக்கும், அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தும்.

– இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

☞2



# 5 மோட்டார் சைக்கிள்களை துவம்சம்செய்த யானைகள்

## பெற்றோல் வரிசையில் வைக்கப்பட்டிருந்தபோது சம்பவம்

பெற்றோல் பெறுவதற்காக வரிசையில் வைக்கப்பட்டிருந்த ஐந்து மோட்டார் சைக்கிள்களை வழியால் வந்த யானைகள் அடித்து, நொறுக்கித் துவம்சம் செய்துள்ளன.

இந்தச் சம்பவம் இன்று அதிகாலை வெல்லாவெளிப் பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

வெல்லாவெளி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடந்த மூன்று நாட்களாக 500 இற்கும் மேற்பட்ட மோட்டர் சைக்கிள்கள், ஓட்டோக்கள் என வாகனங்கள் பெற்றோலுக்காக நிறுத்திவைக்கப்பட்டிருந்தன.

இன்று அதிகாலை 4 மணியளவில் பிரதான

☞2

# எரிபொருள் நேரடிக் கொள்வனவு; வடக்கு மாகாணத்துக்கு அனுமதி!

## அமைச்சர் காஞ்சன உறுதி



எரிபொருள் இறக்குமதியை நேரடியாக மேற்கொள்வதற்கு வடக்கு மாகாண எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்கள் இணையத்துக்கு விசேட அனுமதி பெற்றுக் கொடுக்கப்படும். இதற்கான அமைச்சரவைப் பத்திரம் விரைவில் சமர்ப்பிக்கப்படும்.

– இவ்வாறு எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர உறுதியளித்தார்.

வடக்கு மாகாண எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களின் இணையத்துக்கும்,

☞2

# இரண்டு செயலாளர்களும் வடக்கிலிருந்து விடுவிப்பு

(ந.லோகதயாளன்)

வடக்கு மாகாணத்தில் இரு செயலாளர்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை வடக்கு ஆளுநர் மீளப் பெற்றமையை அடுத்து அவர்கள் இருவரையும் மாகாணத்திற்கு வெளியே விடுவித்தார் வடக்கு மாகாண பிரதம செயலாளர்.

வடக்கு மாகாணத்தில் நீண்ட காலம் பணியாற்றிய நிர்வாக சேவை விசேட தர அதிகாரிகளான இளங்கோவன், செந்தில்நந்தனன் ஆகிய இருவருக்கு வடக்கு ஆளுநர் வழங்கிய நியமனத்தை மீளப் பெற்றார். இவ்வாறு ஆளுநர் நியமனத்தை மீளப் பெற்ற இரு நிர்வாக சேவை அதிகாரிகள் தொடர்பில் பிரதம செயலாளரிக்கும் அறிக்கையிடப்பட்டது. இதற்கமைய வடக்கு மாகாண பிரதம செயலாளர் மாகாணத்திற்கு வெளியே விடுவித்து கடிதம் அனுப்பி வைத்துள்ளார். இதேநேரம் இருவரின் பதவிகளையும் மீளப்பெற்று மாகாணத்திற்கு வெளியே அவர்களை அனுப்புவதனை உடன் தடுத்து நிறுத்துமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியின் செயலாளருக்கு கடிதம் அனுப்பிமையும் குறிப்பிடத்தக்கது.

## ராஜபக்ஷக்களை விரட்டியடிப்பதற்கு ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

– இவ்வாறு முன்னாள் பிரதமரும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

புதிதாகப் பதவியேற்றுள்ள அமைச்சர்கள் சிலருடன் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுமுன்தினம் உரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

நான் எப்போதும் மக்களுடன்தான் இருக்கின்றேன். நாட்டை விட்டு ஓடும் எண்ணம் எனக்குக் கிடையாது. பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டை மீட்டெடுத்த நான், நாட்டைவிட்டு ஏன் ஓட வேண்டும்?

ராஜபக்ஷக்கள் உள்ளடங்கிய பெரமுன கட்சி மக்கள் ஆணையை இழந்துவிட்டது என்று எதிர்த்தரப்பினர் உளறுகின்றனர். இது வேடிக்கையாக இருக்கின்றது.

புதிய அமைச்சரவையில் அங்கம் வகிப்பவர்கள் இந்த நெருக்கடியான நிலைமையில் மிகவும் பொறுப்புடன் செயற்பட வேண்டும். உங்கள் (அமைச்சர்கள்) அனைவருக்கும் எனது ஒத்துழைப்பை வழங்குவேன் – என்றார்.

## சிறையிலுள்ள ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் எம்மிடம் முன்வைக்கும் கோரிக்கைகளை நாம் சாதகமாகப் பரிசீலிப்போம் என்றும் அவர் மேலும் கூறினார்.

## 5 மோட்டார் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீதியைக் குறுக்கறுத்த யானைகள் அங்கு அடுக்கிவைக்கப்பட்டிருந்த 5 மோட்டார் சைக்கிள்களை அடித்து நொறுக்கி மிதித்துச் சென்றன.

அந்தவேளை அங்கு நின்ற வாகன உரிமையாளர்கள் யானைகளைக் கண்டு ஓடினர்.

காலையில் ஏனையவர்கள் வந்து பார்த்தபோது 5 மோட்டார் சைக்கிள்கள் இவ்வாறு சேதமாக்கப்பட்டுக் காணப்பட்டன.

வெல்லாவெளி பொலிஸ் பிரிவு உட்பட்ட காக்காச்சிவட்டை எனும் பின்தங்கிய கிராம விவசாயிகளின் மோட்டார் சைக்கிள்களே அவை என்று அங்கு வரிசையில் நின்ற ஆசிரிய ஆலோசகர் ஒருவர் தெரிவித்தார்.

மழைக்கு மத்தியிலே இந்த யானைகளின் அட்டகாசமும் அதிகரித்துள்ளது.

## எரிபொருள் நேரடிக் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேயசேகரவுக்கும் இடையிலான சந்திப்பு கொழும்பில் நேற்று இடம்பெற்றது.

சந்திப்பில் கலந்துகொண்ட இணையத்தின் தலைவர் ஜெ.ஸ்ரீசங்கர் இது தொடர்பில் ஊடகங்களிடம் தெரிவித்ததாவது,

இலங்கை அரசு வெளிநாடுகளிலிருந்து நேரடியாக எரிபொருளை இறக்குவதற்கான அனுமதியை வழங்குவதற்குத் தயாராக இருப்பதாக அறிவித்திருந்தது. அதற்கு அமைவாக, வடக்கு மாகாண எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களின் இணையம், பல்வேறு எரிபொருள் இறக்குமதி நிறுவனங்களுடன் பேச்சு நடத்தி, அதில் ஓரளவு வெற்றியும் கண்டிருந்தது.

இந்தநிலையில் இலங்கை அரசின் அனுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரைச் சந்தித்தோம். அவரும் அதற்கு இணங்கியுள்ளார். நாம் அவ்வாறு நேரடியாக இறக்குவதற்குரிய ஒழுங்குகளை மேற்கொள்வதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை தயார் செய்வதாகவும் அவர் கூறினார். எரிபொருள் நேரடியாக நாம் இறக்கினாலும், எரிபொருளின் விலையில் மாற்றம் செய்ய முடியாது. அரசால் நிர்ணயிக்கும் விலைக்கே விற்பனை செய்ய வேண்டும்.

இதேவேளை, வடக்கு மாகாணத்துக்கு மண்ணெண்ணெய் விநியோகம் நீண்டகாலமாக இடம்பெறாமையையும் அமைச்சருக்குச் சுட்டிக்காட்டினோம். இதனால் மீனவர்களும், விவசாயிகளும் வாழ்வாதாரத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளதை அமைச்சருக்கு விரிவாக எடுத்துரைத்தோம்.

இதையடுத்து, இரு வாரங்களுக்குள் வடக்கு மாகாணத்துக்கு மண்ணெண்ணெய் விநியோகத்துக்கான ஒழுங்குகளை மேற்கொள்வதாக அமைச்சர் உறுதியளித்தார் – என்றார்.

## நாடாளுமன்றக் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும் மற்றும் எதிரணி உறுப்பினர்கள் இக்குழுக்களில் அங்கம் வகித்தாலும், தலைமைப்பதவியை தக்க வைத்துக் கொள்ள ஆளுங்கட்சியே முற்படும். நல்லாட்சியின்போது இந்த நிலைமை மாறுபட்டது.

கோப் குழு தலைவராக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துனெத்தியும், அரச நிதி பற்றிய குழுவின் தலைவராக கூட்டமைப்பு எம்.பி. சுமந்திரனும் செயற்பட்டனர்.

மொட்டு ஆட்சியின் கீழ் கோப் குழுவுக்கு சரித ஹேரத், கோபா குழுவுக்கு திஸ்ஸ விதாரண, அரச கணக்குகள் பற்றிய குழுவுக்கு அநுர பிரியதர்சன யாப்பா போன்ற மொட்டு கட்சி எம்.பிக்களே நியமிக்கப்பட்டனர்.

எனினும், புதிய கூட்டத்தொடர் ஆரம்பமானதும், மேற்படி முக்கிய மூன்று குழுக்களினதும் தலைமைப் பதவிகள் எதிரணி எம்.பிக்களுக்கு வழங்கப்படவுள்ளன.

## அவசரகாலச் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியுள்ளமையால், அரசமைப்பில் உறுதி செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறப்பட்டுள்ளது என அவர் அந்த மனுவின் ஊடாக சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால் அது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வலுவிழக்கச் செய்து உத்தரவிடுமாறு மனுதாரர் உயர்நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

குறித்த மனுவில் பிரதிவாதிகளாக ஜனாதிபதி சார்பில் சட்டமா அதிபர், முன்னாள் ஜனாதிபதி செயலாளர் காமினி செனரத், தற்போதைய ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஓய்வு பெற்ற ஜெனரல் கமல் குணரத்ன ஆகியோரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

## கோட்டாவின் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

54 வயதான அவரை வெல்லம்பிட்டிப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபர், ஐக்கிய மக்கள் சக்தியின் துறைமுக தொழிற்சங்கத்தின் முன்னாள் தலைவர் களுதந்திரிகே உதேனி ஜயரத்ன என்பவராவார் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

## அமைதி வழிப் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தின்போது வன்முறையில் ஈடுபட்டவர்கள் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகநபர்களைக் கைதுசெய்து வருகின்றனர். குற்றாவளிகளுக்கு எதிராக நீதிமன்றம் தண்டனையை வழங்கும். இதில் எவரும் தலையிட முடியாது.

இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குள் அத்துமீறி நுழைந்து ஒளிபரப்புச் சேவைகளுக்கு இடையூறு விளைத்தவர்களை எப்படி மன்னிக்க முடியும்? அவர்களை எப்படி அஹிம்சை வழிப் போராட்டக்காரர்கள் என்று கூற முடியும்?

அஹிம்சை வழியில் போராடியவர்களில் அராஜக நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களும் உள்ளனர். அவர்களை அடையாளம் கண்டு கைது செய்யும் நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கு எதிராக எவரும் கூக்குரல் எழுப்ப முடியாது – என்றார்.

## 2 சகோதரிகளை .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிர்காப்புப் பிரிவுக்கு அருகில், கொழும்பில் இருந்து அளுத்கம நோக்கிப் பயணித்த ரயிலுடன் இரண்டு யுவதிகளும் மோதப்பட்டுள்ளனர்.

இதையடுத்து, இரண்டு யுவதிகளும் கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் அவர்களில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த யுவதி, உடபுஸ்ஸல்லாவ பகுதியைச் சேர்ந்தவர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் வெள்ளவத்தைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு - தொலைபேசி இலக்கம்- 076 443 8622

யாழ்ப்பாணம் – கொழும்பு விமான நிலையம்
கொழும்பு விமான நிலையம் – யாழ்ப்பாணம்
போக்குவரத்து சேவை
29th திகதி பிற்பகல் 03.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து விமான நிலையம்
30th திகதி காலை 06.00 மணிக்கு விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம்
30th திகதி பிற்பகல் 07.00 மணிக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து விமான நிலையம்


குளிரூட்டப்பட்ட பேருந்து
மேலதிக விபரங்களுக்கும் ஆசன முன்பதிவுகளுக்கும் அழையுங்கள்
+94 77 068 4905
- ரவிசங்கர் -
Asiazone Vacation (Pvt) ltd
551A, Kasthuriyar Road, Jaffna

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## முதல் மதிப்பிழப்பு எதற்கு?

கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் அவசர கால நிலைமை நீடிப்புத் தொடர்பான பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் முக்கிய விடயம் ஒன்றைச் சுட்டிக்காட்டி இருந்தார்.

அவசர கால நிலைமையில் கீழ் இந்த நாட்டில் நீடித்து வரும் – குற்றம் இழைத்தோருக்கு எதிரான தண்டனை விலக்களிப்பு கொடூரம் பற்றி அவர் விவரித்தார்.

1983 இல் இருந்தே அரச பயங்கரவாதத்தை இழைக்கும் தரப்புகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை, பொறுப்புக் கூறல் நடைமுறைப்படுத்தப்படுவதில்லை, அத்தரப்புகள் தண்டனை விலக்களிப்பு என்ற சுதந்திரத்தோடு, தொடர் குற்றங்களை இழைத்தபடி வலம் வருகின்றன.

இது பற்றிய விடயங்களை சுமந்திரன் குறுகிய விவரங்களோடு நாடாளுமன்றத்தில் வரிசைப்படுத்தினார்.

1983 ஜூலையில் இதே காலப்பகுதியில் வெலிக்கடையில் 53 தமிழ் கைதிகள் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்ட மிருகத்தனம் அரங்கேறியது. அந்தக் கைதிகள் இந்த நாட்டின் – நீதி அமைச்சின் – பாதுகாப்பிலும் காவலிலும் இருந்தவர்கள். அவர்களின் – அந்தக் கைதிகளின் – பாதுகாப்புக்கு இந்த நாடே – அரசே – முழுப் பொறுப்பு.

ஆனால் அந்தப் படுகொலைகளுக்காக யார் மீதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டதா, யாராவது பொறுப்புக் கூறலுக்கு முன் நிறுத்தப்பட்டார்களா என்று சுமந்திரன் நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து பிந்தெனுவெவவில் கைதிகள் படுகொலை செய்யப்பட்டனர். அவ்விடயத்திலும் யாருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

திருகோணமலை நகரத்தில் பல்கலைக்கழக அனுமதியை எதிர்பார்த்து இருந்த ஐந்து தமிழ் மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள், மூதூரில் ‘அக்ஷன் பார்ம்’ தொண்டு நிறுவனத்தின் 17 ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். கொழும்பில் கடத்தப்பட்ட 11 தமிழர்கள் கப்பம் பணம் கேட்டு திருகோணமலையில் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் படுகொலை செய்யப்பட்டனர்.

இப்படி நீதி கிட்டாத – சட்ட விசாரணைகளே முன்னெடுக்கப்படாத– அரச பயங்கரவாதப் படுகொலைகளின் பட்டியல் நீண்டது என்பதை சுமந்திரன் நாடாளுமன்றத்தில் மீண்டும் அம்பலப்படுத்தினார்.

இந்தப் படுகொலைகள் எல்லாவற்றிலும் அரச படைகளே சம்பந்தப்பட்டுள்ளன. இவை அரச பயங்கரவாதத்தின் கொடூர முகத்தை அம்பலப்படுத்தும் சில சம்பவங்கள் மட்டுமே.

இந்தக் கொடூரங்களைப் புரிந்த யாரும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவே இல்லை. இந்த படுகொலைக் குற்றவாளிகள் ‘நாட்டின் சுதந்திரத்தை மீட்ட வீர புருஷர்களாக’ போற்றப்படுகின்றனரே தவிர, உண்மைக் கொலைஞர்களாக அடையாளம் காணப்படவேயில்லை.

இதுதான் இலங்கையின் நீதி முறைமை – அபத்த நிலைமை – என்று விசனத்துடன் சுட்டிக்காட்டுகிறார் சுமந்திரன்.

இலங்கை நாணயம் மதிப்பிழந்து விட்டமை குறித்தும், அதனால் ஏற்பட்டுள்ள பொருளாதார பாதிப்புகள் பற்றியும் அதிகம் பேசப்படுகின்றது. ஆனால் அவை எல்லாவற்றிற்கும் முன்னர், நாட்டின் சுதந்திரமும் மனித உயிர்களின் பெறுமதியும் இங்கு மதிப்பிழந்து போனமைதான் முதல் பிரச்சினை. அது குறித்து சிந்தித்து, கவலைப்பட்டு, நியாயம் தேடாவிட்டால், வேறு எந்தப் பிரச்சினைக்கும் நீதி, நியாயமான தீர்வு இங்கு கிட்ட மாட்டாது. அதுதான் உண்மை.

# நல்லூர் திருவிழாக் காலத்தில் திருவிழாக்கால நடைமுறைகள்

நல்லூர் உற்சவ காலங்களில்; அடியார்கள் பின்வரும் அறிவுறுத்தல்களை கடைப்பிடிக்க வேண்டும் என யாழ். மாநகரசபை அறிவித்துள்ளது.

அவை வருமாறு –

நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் எதிர்வரும் 2022.08.01 ஆம் திகதி வைரவர் சாந்தி உற்சவத்துடன் ஆரம்பமாகி 2022.08.28 ஆம் திகதி நிறைவடைகின்றது.

அடியவர்கள் அனைவரும் ஆசாரசீலர்களாக ஆலயத்திற்கு வருகைதருமாறு வேண்டப்;படுகின்றீர்கள்.

2022.07.31 ஆம் திகதி ஞாயிறு நள்ளிரவு 12 மணி முதல் 2022.08.28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு 12 மணி வரை வீதித்தடை அமுலில் இருக்கும்.

வீதித்தடைக்குள் வதிபவர்களுக்கான வாகன அனுமதி அட்டைகள், மாநகர சபையால் வழங்கப்படும்.

இந்தக் காலப்பகுதியில் பருத்தித்துறை வீதி வழியாக யாழ்ப்பாணம் வருகின்ற வாகனங்களுக்கும் யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை வீதி வழியாக வருகின்ற வாகனங்களுக்குமான மாற்றுப்பாதை ஒழுங்குகள் வழமைபோல் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை வீதியினூடாகச் செல்லும் வாகனங்கள் ஆனைப்பந்தி சந்தியைச் சென்றடைந்து பின்னர் நாவலர் வீதியினூடாக நல்லூர் குறுக்கு வீதி சந்தியை அடைந்து அந்த வீதியினூடாகச் சென்று மீண்டும் பருத்தித்துறை வீதியை அடையும். பருத்தித்துறை வீதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வரும் வாகனங்கள் பருத்தித்துறை வீதியிலிருந்து நல்லூர் குறுக்கு வீதியை அடைந்து அதனூடாக நாவலர் வீதியை அடைந்து யாழ்ப்பாண நகர்ப்பகுதிக்கு செல்லும்.

சப்பரம், தேர், தீர்த்தம் ஆகிய விசேட தினங்களில் பருத்தித்துறை வீதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவரும் வாகனங்கள் பருத்தித்துறை வீதியினூடாக முத்திரைச் சந்தியை அடைந்து அதனூடாக கச்சேரி நல்லூர் வீதியை அடைந்து அதன் பின்னர் கச்சேரி வீதியை அடைந்து கண்டி வீதியினூடாக யாழ்ப்பாணம் நோக்கி செல்லும். யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை வீதியினூடாக செல்லும் வாகனங்கள் பருத்தித்துறை வீதியினூடாக ஆனைப்பந்தி சந்தியை சென்றடைந்து நாவலர் வீதியினூடாக கச்சேரி நல்லூர் வீதியை அடைந்து பின்னர் முத்திரைச்சந்தியை அடைந்து பருத்தித்துறை வீதியை அடைந்து செல்லும்.

ஆலயச் சூழலில் பாதணிகளுடன் நடமாடுவது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

இரண்டாவது வீதித்தடைப்பகுதிக்குள் அதாவது சிவப்பு வெள்ளை கொடிகட்டப்பட்டுள்ள பகுதிக்குள் எந்தவொரு தற்காலிக வியாபாரத்துக்கும் அனுமதி வழங்கப்பட மாட்டாது.

ஆலயச்சூழலில் உள்ள அன்னதான மடங்கள், தண்ணீர்பந்தல்கள், வியாபார நிறுவனங்கள், உணவு வகைகளை கையாளும் நிறுவனங்கள் ஆகியன சுகாதார நடைமுறைகள் தொடர்பாக யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொண்டு சுகாதார நடைமுறை பின்பற்றுதல் வேண்டும்.

வியாபாரிகள்(நிரந்தர,தற்காலிக) மதியம் ஒரு மணிக்கும் 2 மணிக்கும், பி.ப 10 மணிக்கும் நள்ளிரவு 12 மணிக்கும் இடையில் அரசடி வீதித்தடை ஊடாக பொருள்களை ஏற்றி இறக்க முடியும்.

தூக்குக்காவடிகள் , பறவைக் காவடிகள் பருத்தித்துறை வீதியால் மட்டும் அனுமதிக்கப்படுவதுடன் செட்டித் தெரு வீதிக்கு அருகில் அமைந்துள்ள ஸ்ரீ முருகன் தண்ணீர்ப் பந்தலுக்கு முன்பாக தரித்து பக்தர்கள் கோவிலுக்கு செல்ல அனுமதிக்கப்படுவதுடன் வாகனங்கள் செட்டித்தெரு வீதியால் வெளிச்செல்ல வேண்டும்.

ஆலய வெளி வீதிகளில் புனிதம் பேணும் பொருட்டு விளம்பரங்கள், துண்டுப் பிசுரங்களில் சுவாமிப் படங்களை அச்சிடுவதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

ஆலயச் சூழலில் பொலித்தீன் பாவனை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுநோய் அபாயம் தொடர்பில் சுகாதார அமைச்சால் அவ்வப்போது விடுக்கப்படும் அறிவுறுத்தல்களைஅனைவரும் கடைப்பிடித்தல் வேண்டும்.

அடியார்கள், பொதுமக்கள், வியாபாரிகள் கடமையில் ஈடுபடும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள். – என்றுள்ளது.

# மொட்டுக் கட்சியின் உள்ளூராட்சி மன்ற உறுப்பினருக்கு அழுகிய முட்டை தாக்கு!

மொட்டுக் கட்சியின் பெண் உள்ளூராட்சி மன்று உறுப்பினர் ஒருவருக்கு அழுகிய முட்டைகளை வீசித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அநுராதபுரம் உள்ளூராட்சிமன்ற பெண் உறுப்பினரான சுரங்கி ரேணுகா என்பவரே இவ்வாறு தாக்கப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை நகரசபைத் தலைவர் சோமதாச தலைமையில் நடைபெற்ற நகரசபை கூட்டத்தின் போது நகர சபை ஆணையாளர் ருவன் விஜேதுங்கவை இந்தப் பெண் உறுப்பினர் செருப்பால் அடித்து அவமானப்படுத்தியுள்ளார்.

இதனையடுத்து புதன்கிழமை அவர் சபை அலுவலகத்துக்கு வந்திருந்த நிலையில் நகர சபை உறுப்பினர்கள் அவரை பலவந்தமாக வெளியே தூக்கிவந்து அழுகிய முட்டைகளால் தாக்கி, கழிவு நீரை ஊற்றி அவமானப் படுத்தியுள்ளனர்.

கடைசியில் அநுராதபுரம் பொலிஸார் தலையிட்டு சுரங்கி ரேணுகாவை மீட்டு அந்த இடத்திலிருந்து பாதுகாப்பாக அழைத்துச் சென்றனர்.

# எரிபொருள் வரிசையில் ஆடி அமாவாசை விரதம்!

எரிபொருள் வரிசையில் காத்திருந்தவர் ஆடி அமாவாசை விரதத்தை வீதியில் முடித்துக்கொண்ட புகைப்படம் ஒன்று சமூக வலைத்தளங்களில் வைரலாகி உள்ளது.

தந்தையை இழந்தவர்கள் ஆடி அமாவாசையான நேற்று (வியாழக்கிழமை) தந்தைக்காக விரதம் இருந்து , மதியம் காலமான தந்தைக்கு படையல் செய்து , அந்த உணவை சாப்பிட்டு தமது விரதத்தை முடித்துக்கொள்வார்கள்.

இந்நிலையில் நேற்று எரிபொருள் பெற்றுக்கொள்ள வரிசையில் காத்திருந்த ஒருவர் தமது விரதத்தை வீதியில் முடித்து கொண்ட படம் சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அமெரிக்கா, தென்கொரியாவுடன் மோதல் வந்தால் அணு ஆயுதங்களை பயன்படுத்துவோம்; கிம் ஜாங்

வடகொரியாவுக்கும், அமெரிக்காவுக்கும், அண்டை நாடான தென் கொரியாவுக்கும் இடையேயான உறவில் நீண்டகாலமாக பதற்றம் நிலவி வருகிறது. ஆனால் இடையில் ஒரு திருப்புமுனையாக இரு கொரியாக்கள் இடையேயான உறவில் ஒரு சுமூக நிலை உருவானது. தென்கொரியா ஏற்பாட்டில் அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ட்ரம்பும், வடகொரியாவின் தலைவர் கிம் ஜாங் அன்னும் முதன்முதலாக சிங்கப்பூரில் 2018ம் ஆண்டு ஜுன் 12ம் திகதி சந்தித்து பேச்சு நடத்தினார்கள். உலகமே உன்னிப்பாக கவனித்த அந்தப் பேச்சின்போது, கொரிய தீபகற்ப பகுதியை அணுஆயுதமில்லா பிரதேசமாக மாற்ற ஒரு உடன்பாடு கையெழுத்தானது. அதன்பின்னர் இரு தரப்புக்கும் இடையேயான உறவில் சின்னதாய் ஒரு மாற்றம் பளிச்சிட்டது. ஆனால் டிரம்புக்கும், கிம் ஜாங் அன்னுக்கும் இடையே வியட்னாம் நாட்டில் ஹனோய் நகரில் 2019ம் ஆண்டு பிப்ரவரி 27, 28ம் திகதிகளில் நடந்த பேச்சுபாதியிலேயே முறிந்து போனது. இதன் முறிவுக்கு இரு நாடுகளும் ஒன்றை யொன்று பரஸ்பரம் குற்றம் சாட்டின. அதைத் தொடர்ந்து நிறுத்தி வைத்திருந்த கண்டம் விட்டு கண்டம்பாயும் ஏவுகணை சோதனைகளை வடகொரியா மீண்டும் தொடங்கியது. அது மட்டுமின்றி அந்த நாடு மீண்டும் அணுஆயுத சோதனைக்கு தயாராகி வருவதாகவும் தகவல்கள் வெளியாகின. அதன் பின்னர் இரு தரப்பு பேச்சு முடங்கிப்போனது. தென்கொரியாவுடனும் வடகொரியா இணக்கமாக இல்லை. ஆனால் அமெரிக்காவில் ஜோ பைடன் அதிபராகவும், தென் கொரியாவில் யூன் சுக் யோல் அதிபராகவும் வந்துள்ளனர். இருப்பினும் அவ்விருநாடுகளுடனான வடகொரிய உறவில் பெரிதான மாற்றம் இல்லை. அவ்விரு நாடுகளும் மீண்டும் அமைதிப்பேச்சைத் தொடர்வதற்கு அழைப்பு விடுத்தபோதும், வடகொரியா அதை நிராகரித்து விட்டது. இந்த நிலையில் நேற்று முன்தினம் கொரியப்போரின் 69வது ஆண்டு நிறைவு நாள்விழாவில் போர் வீரர்கள் மத்தியில் வடகொரிய தலைவர் கிம்ஜாங் அன் ஆவேசமாகப் பேசினார். அப்போது அவர் கூறியதாவது:–



எந்த ஒரு நெருக்கடிக்கும் பதில் அளிக்கக் கூடிய முழுமையான நிலையில் நமது ஆயுதப் படைகள் இருக்கின்றன. மேலும் நமது நாட்டின் அணு ஆயுதப்போரைத் தடுப்பது, அதன் முழு ஆற்றலை கடமையாகவும், சரியாகவும், விரைவாகவும் அணி திரட்ட தயாராக உள்ளன. அமெரிக்கா, தென் கொரியாவுடன் ராணுவ மோதல்கள் வந்தால் வட கொரியா அணு ஆயுதங்களைப் பயன்படுத்தும். அமெரிக்கா தனது விரோதக்கொள்கைகளை நியாயப்படுத்துவதற்கு, வட கொரியாவை பேய்த்தனமாக காட்டுகிறது. அமெரிக்காவின் இரட்டை நிலையையும், குண்டர்கள் போன்ற நிலையையும்தான் அமெரிக்கா மற்றும் தென் கொரியாவின் கூட்டு போர் பயிற்சிகள் காட்டுகின்றன. தென்கொரியாவின் புதிய அதிபர் யூன் சுக் யோல் மோதல் வெறி பிடித்தவராக உள்ளார். அவர் கடந்த கால தென்கொரிய அதிபர்களை விட அதிகமாக சென்று விட்டார். மேலும் அவரது பழமையவாத அரசானது, குண்டர்களால் வழிநடத்தப்படுகிறது. கடந்த மே மாதம் பதவிக்கு வந்தது முதல் அவரது அலுவலகம், அந்த நாடு அமெரிக்காவுடன் ராணுவ கூட்டணியை வலுப்படுத்தவும், முன் எச்சரிக்கை தாக்குதல் திறன் மற்றும் வடகொரியாவின் அணுசக்தி அச்சுறுத்தல்களை வீழ்த்தும் திறனை அதிகரிக்கவும் நகர்ந்துள்ளது. அவர்கள் மிகவும் அஞ்சும் முழுமையான ஆயுதங்களை வைத்துள்ள நமது நாட்டுக்கு எதிராக ராணுவ நடவடிக்கை பற்றி பேசுவது என்பது அபத்தமானது. அது மிகவும் ஆபத்தான தற்கொலை நடவடிக்கை ஆகும். அத்தகைய ஆபத்தான முயற்சி நமது வலிமையான பலத்தால் உடனடியாக தண்டிக்கப்படும். மேலும் யூன் சுக் யோல் அரசும், அவரது ராணுவமும் அழிக்கப்படும். இவ்வாறு அவர் கூறினார். வடகொரியாவின் தலைவர் கிம் ஜாங் அன், இந்த ஆண்டு தொடர்ந்து அணு ஆயுத அச்சுறுத்தல்களை விடுத்துவருவது குறிப்பிடத்தக்க அம்சமாக அமைந்துள்ளது. அந்த வகையில் கடந்த ஏப்ரல் மாதம், வடகொரியாவுக்கு அச்சுறுத்தல் வந்தால் அது முன்கூட்டியே அணு ஆயுதங்களை பயன்படுத்த முடியும். அவை போர் தடுப்பு என்ற ஒற்றைப்பணிக்கு ஒருபோதும் மட்டுப்படுத்தப்பட மாட்டாது என்று எச்சரித்தார். கொரோனா பெருந்தொற்றுநோயால் எல்லைகள் மூடலாலும், அமெரிக்கா மறும் அதன் கூட்ட ணி நாடுகளின் பொருளாதார தடைகளாலும், தனது சொந்த நிர்வாகத்தாலும் பொருளாதாரம் மேலும் பாதித்துள்ள நிலையில், கிம் ஜாங் அன் சமீப காலமாக மக்கள் ஆதரவை திரட்டுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



குரங்கு அம்மை நோய் பரவல் தீவிரம் எதிரொலி :

## அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரம் முழுவதும் அவசரநிலை பிரகடனம்

குரங்கு அம்மை நோய் பரவல் தீவிரமடைந்துள்ளதை அடுத்து அமெரிக்காவின் சான் பிரான்சிஸ்கோ நகரம் முழுவதும் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஆபிரிக்க நாடுகளில் இருந்து வெடித்து கிளம்பிய குரங்கு அம்மை கிருமி தற்போது வரை 78 நாடுகளில் தீவிரமாக பரவி உள்ளது. குறிப்பாக அமெரிக்காவில் இதுவரை 4,600 பேருக்கு குரங்கு அம்மை தொற்று உறுதியாகி உள்ளது. குறிப்பாக காலிபோர்னியா மாகாணம் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளது. அங்கு 800 பேர் குரங்கு அம்மை வைரஸால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சான் பிரான்சிஸ்கோ நகரத்தில் மட்டும் 261 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ள நிலையில், குரங்கு அம்மை தொற்றினை கட்டுப்படுத்தும் முயற்சியாக சான் பிரான்சிஸ்கோ நகரம் முழுவதும் மருத்துவ அவசரநிலை பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

காலிபோர்னியாவில் குரங்கு அம்மை பரவி வரும் நிலையில், போதுமான தடுப்பூசிகளை பிடன் அரசு விநியோகிக்கவில்லை என்றும் சான் பிரான்சிஸ்கோ நிர்வாகம் குற்றம் சாட்டியுள்ளது. மக்கள் தொகை அடிப்படையில், 70,000 குரங்கு அம்மை தடுப்பூசிகள் தேவைப்படும் நிலையில், பிடன் அரசு நிர்வாகம் 12,000 தடுப்பூசிகளை மட்டுமே விநியோகித்து இருப்பதாக மாகாண ஆளுநர் குற்றம் சாட்டியுள்ளார்.

## அமெ., சீன அதிபர்கள் இரு மணி நேரம் பேச்சு



அமெரிக்கா அதிபர் ஜோ பைடனும், சீன அதிபர் ஜி ஜின்பிங்கும் தொலைபேசி மூலம் கலந்துரையாடியுள்ளனர். ஐந்தாவது முறையாக இந்த கலந்துரையாடல் நடைபெற்றதாக வெள்ளை மாளிகை மூத்த அதிகாரி தெரிவித்துள்ளார். இரு நாடுகளிடையேயான உறவில் பதட்டமான சூழல் நிலவும் நிலையில் இரு தலைவர்களுக்கும் இடையே இந்த உரையாடல் நடைபெற்றதாக அவர் கூறியுள்ளார். பருவ நிலை மாற்றம் மற்றும் சுகாதார பாதுகாப்பு உள்பட இரு நாடுகளும் இணைந்து செயல்படக் கூடிய பகுதிகள் குறித்து இரு தலைவர்களும் விவாதித்தாகவும் கூறப்படுகிறது.

இரு நாடுகள் இடையே வேறுபாடுகள் இருந்தாலும், பல்வேறு துறைகளில் அமெரிக்கா, சீனா இடையேயான ஒத்துழைப்பு, இரு நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, சர்வதேச அளவில் நன்மை பயக்கும் என்று அமெரிக்க அதிபர் இந்த பேச்சின் போது குறிப்பிட்டார். தைவான் தொடர்பான அமெரிக்காவின் கொள்கையில் மாற்றம் இல்லை என்றும், அந்த பகுதியில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு எதிரான ஒருதலைப்பட்ச முயற்சிகளை அமெரிக்கா கடுமையாக எதிர்க்கிறது என்றும் பைடன் தெரிவித்தார். இந்த பேச்சுவார்த்தையின்போது இரு தலைவர்களும் நேரில் சந்தித்து பேச்சு நடத்தவும் ஒப்புக் கொள்ளப்பட்டதாக வெள்ளை மாளிகை தகவல்கள் தெரிவித்துள்ளன.

## இங்கிலாந்து பிரதமர் தேர்தலில் முந்தும் ரிஷி சுனக்; கருத்துக்கணிப்பில் தகவல்



இங்கிலாந்து பிரதமர் போரிஸ் ஜான்சன் பதவி விலகியதை தொடர்ந்து, ஆளும் கன்சர்வேட்டிவ் கட்சித்தலைவர் மற்றும் பிரதமரை தேர்வு செய்யும் பணிகள் தீவிரமடைந்து இருக்கிறது. இதில் முன்னாள் நிதி மந்திரியும், இந்திய வம்சாவளியை சேர்ந்தவருமான ரிஷி சுனக் மற்றும் வெளியுறவு மந்திரி லிஸ் டிரஸ் ஆகியோர் இடையே நேரடிப்போட்டி ஏற்பட்டு உள்ளது. இதில் நாட்டின் புதிய பிரதமரை கன்சர்வேட்டிவ் கட்சி உறுப்பினர்கள் அடுத்த வாரம் முதல் தபால் ஓட்டு மூலம் வாக்களிக்க உள்ளனர். இந்த நிலையில் கடந்த 2019ம் ஆண்டு தேர்தலில் முதல் முறையாக கன்சர்வேட்டிவ் கட்சியை ஆதரித்த வாக்காளர்களிடம் ரிஷி சுனக் ஆதரவு பெற்று உள்ளார். மொத்தம் 4,946 பேரிடம் நடத்தப்பட்ட ஆய்வில், ரிஷி சுனக் ஒட்டுமொத்த நிகர சாதகமான மைனஸ் 30 மதிப்பெண்ணை கொண்டுள்ளார். அதேநேரம் ட்ரஸ்ஸின் நிகர சாதகத்தன்மை மைனஸ் 32 ஆகும். இதன் மூலம் டிரஸ்சை விட ரிஷி சுனக் சற்றே முன்னிலை பெற்றிருப்பது கண்டறியப்பட்டு உள்ளது.

# 2 நாள் பயணத்தை முடித்து பிரதமர் மோடி புறப்பட்டார்



## ஸ்டாலின் வழியனுப்பி வைத்தார்

பிரதமர் மோடி 2 நாள் பயணமாக நேற்று சென்னை வந்தார். சென்னை நேரு ஸ்டேடியத்தில் நடைபெற்ற 'செஸ்' ஒலிம்பியாட் போட்டி தொடக்க விழாவில் பங்கேற்று போட்டியை தொடங்கி வைத்தார்.

அங்கு நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளையும் பார்வையிட்டார். அதன் பிறகு கிண்டி கவர்னர் மாளிகைக்கு சென்று தங்கினார்.

இன்று காலையில் அண்ணா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் பங்கேற்ற பிறகு நண்பகல் 12 மணியளவில் சென்னை விமான நிலையம் சென்றார்.

கவர்னர் ஆர்.என்.ரவியும் அவரும் ஒரே காரில் விமான நிலையம் சென்றனர். அங்கு பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் செஸ் போர்டை நினைவுப் பரிசாக வழங்கி வழி யனுப்பி வைத்தார். அவருடன் பொன்முடி, எ.வ.வேலு, கே.என்.நேரு உள்ளிட்ட அமைச்சர்களும் வழியனுப்பி வைத்தனர்.

தமிழக பாரதிய ஜனதா தலைவர் அண்ணா மலை, எதிர்க்கட்சி துணைத்தலைவர் ஓ.பன்னீர் செல்வம், ஜி.கே.வாசன் ஆகியோரும் வழியனுப்பி வைத்தனர். பின்னர் பிரதமர் மோடி தனி விமா னத்தில் அகமதாபாத் புறப்பட்டு சென்றார்.

## வெளிநாடுகளில் படித்த மருத்துவ மாணவர்கள் பயிற்சி கட்டணம் ரூ.30 ஆயிரமாக குறைப்பு; அமைச்சர் சுப்பிரமணியன்



வெளிநாடுகளில் மருத்துவம் படிக்க செல்லும் மாணவர்கள் படிப்பு முடிந்து திரும்பிய பிறகு இன்டன்ஷிப் பயிற்சி பெற வேண்டும். அதற்கு கட்டணமாக ரூ.3 லட்சத்து 20 ஆயிரம் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலைக்கழகம் வசூலிக் கிறது. மக்கள் நல்வாழ்வுத்துறை ரூ.2 லட்சம் வசூலிக்கிறது. ஆக மொத்தம் பயிற்சி பெற ரூ.5 லட்சத்து 20 ஆயிரம் கட்டணம் செலுத்த வேண் டும். அவ்வாறு வெளிநாடுகளில் படித்து வரும் மாணவர்கள் இங்கு பெரிய அளவில் பணம் கட்ட முடியாததால்தான் கடுமையான குளிர் போன்ற சிரமங்களையெல்லாம் தாங்கி படித்து வரு கிறார்கள்.

இந்த நிலையில் பயிற்சி பெற ரூ.5 லட்சம் என்பது மிக அதிகமான கட்டணமாக இருப்பதாக அரசிடம் முறையிட்டார்கள்.

அவர்கள் விடுத்த வேண்டுகோளை ஏற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை யின் பேரில் மருத்துவ பல்கலைக்கழகம் வசூ லித்த ரூ.3 லட்சத்து 20 ஆயிரத்தை குறைத்து வெறும் ரூ.30 ஆயிரம் மட்டும் செலுத்த உத்தரவிடப்பட்டது. இதே போல் மக்கள் நல் வாழ்வுத் துறை வசூலித்து வந்த ரூ.2 லட்சமும் முற்றிலுமாக தள்ளுபடி செய்யப்படுகிறது. ஆக இனி வெளிநாட்டில் படித்து இங்கு பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் ரூ.30 ஆயிரம் மட்டும் கட்டினால் போதும்.

அதேபோல் வெளிநாட்டில் படித்து வரும் மாணவர்களில் 7.5 சதவீதம் பேருக்கு மட்டுமே பயிற்சி வழங்க அனுமதிக்கப்பட்டது. இப்போது அதையும் தேசிய மருத்துவ கவுன்சில் கவனத்துக்கு கொண்டு சென்று 20 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.




## சாதிப்பதற்கு வயது தடையில்லை

### அண்ணா பல்கலையில் பட்டம்பெற்ற 70 வயது முதியவர் முழக்கம்

சென்னை கிண்டி வளாகத்தில் உள்ள அழகப்பா தொழில்நுட்ப கல்லூரியில் 1978ம் ஆண்டு ஆர்.ராஜகோபால் என்பவர் வேதி யியல் பொறியியல் துறையில் பி.டெக். பட்டம் பெற்றார். அதன் பிறகு 1980ம் ஆண்டு எம்.டெக். பட்டம் பெற்றார். இதன் பிறகு அவர் எண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு நிறுவனத்தில் பணிக்கு சேர்ந்தார். பல்வேறு ஊர்களில் பணியாற்றிய ராஜகோபால் 2013ம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

அதன் பிறகு அவர் சென்னை திரும்பினார். அவர் பணியாற்றிய காலங்களில் ஓ.என்.ஜி.சியில் உருவாகும் கழிவுநீர் பிரச்சினைக்கு ஆராய்ச்சி மூலம் தீர்வு காண முயன்றார். அப்போது அவரது முயற்சியை கண்டறிந்த ஓ.என்.ஜி.சி. பொது மேலாளர் அவரை ஊக்கப்படுத்தி பி.எச்.டி. படிக்குமாறு அவ்வப்போது ஊக்கம் அளித்து வந்தார். இந்த சூழலில் ஓய்வுக்கு பிறகு சென்னை திரும்பிய அவர் தொழில் துறையில் பொறியியல் பட்டப்படிப்பை படித்துக்கொண்டிருந்த தனது மகளை பல் கலைக்கழகத்தில் விடுவதற்காக வந்து செல்வார். அப்போது பி.எச்.டி ஆராய்ச்சி படிப்பை தொடர அவருக்கு மீண்டும் ஆர்வம் ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து அண்ணா பல்கலைக்கழகத்தில் பி.எச்.டி. படிப்புக்கு விண்ணப்பித்து தனது ஆராய்ச்சியை தொடர்ந்தார். 70 வயது ஆன நிலையிலும் படிப்பு மீதுள்ள ஆர் வம் காரணமாக ஆராய்ச்சி படிப்பை முடித்து இன்று அண்ணா பல்கலைக்கழகத்தில் பி.எச்.டி. டாக்டர் பட்டம் பெற்றுள்ளார்.

இதுகுறித்து ராஜகோபால் கூறுகையில், ஓ.என்.ஜி.சி.யில் உருவாகும் கழிவுநீர் பிரச்சினைக்கு ஆராய்ச்சி மூலம் தீர்வு காண முயன்றேன். ஆய்வகத்தில் உள்ள தண்ணீரை 2 வெவ்வேறு முறைகளில் சுத்திகரித்தேன். அவை மாசு கட்டுப்பாட்டு வாரி யத்தால் பரிந்துரைக்கப்பட்ட வரம்புகளுக்குள் வருமா? என்பதை கண்டறிய முடிவுகளை ஒப்பிட்டு பார்த்தேன். இது ஒரு ஆரம்ப ஆய்வுதான். இவ்வாறு அவர் கூறினார்.

## செஸ் ஒலிம்பியாட் தொடக்க விழா:

### தமிழர் நாகரிக பெருமையை உலகிற்கு பறை சாற்றியது அன்புமணி பாராட்டு

சென்னை 44ஆவது சதுரங்க ஒலிம்பியாட் போட்டிகள் தொடங்குவதற்கு முன்பாகவே தமிழ்நாடு கோப்பையை வென்றிருக்கிறது. ஒட்டுமொத்த உலகமும் கண்டுகளித்த சதுரங்க ஒலிம்பியாட் தொடக்க விழாவில் தமிழர்களின் பண்பாடு, நாகரிகம், இனப் பெருமைகள், துயரங்கள் உள்ளிட்ட அனைத் தையும் அனைவர் மனதிலும் பதிக்கும் வகையில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது பாராட்டத் தக்கது. சதுரங்கப் போட்டிகளின் தொடக்க விழாவைப் போல் இல்லாமல் உலகத் தமிழ் மாநாட்டுக்கு இணையாக தமிழர் நாகரிகத்தின் பெருமையையும், பண்பாட்டையும் உலகிற்கு உணர்த்தும் வகையில் நிகழ்ச்சிகள் வடிவமைக்கப்பட்டிருந்தன.

உலகம் முழுவதும் அந்த நிகழ்ச்சியை வைத்த கண் வாங்காமல் பார்த்து தமிழர் நாகரிகத்தின் சிறப்புகளை உள்வாங்கிக் கொண்டது. இந்த நிகழ்ச்சிக்கு நடிகர் கமல ஹாசன் வழங்கிய வர்ணனை மிகவும் சிறப்பு. அதில் பங்கேற்ற ஒவ்வொரு கலைஞரின் உழைப்பும் பாராட்டப்பட வேண்டியதாகும். இந்த நிகழ்ச்சி உட்பட ஒட்டு மொத்த நிகழ்ச்சியையும் இயக்கிய இயக்குனர் விக்னேஷ் சிவனின் கருத்தாக்கமும், காட்சிகள் அமைப்பும் பாராட்டுக்குரியவை ஆகும். பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட அனைவரும் பாராட்டியதே இந்நிகழ்ச்சிக்கு கிடைத்த அங்கீகாரம் ஆகும். நிகழ்ச்சிகளைப் பார்த்த நான், தமிழன் என்ற முறையில் பெருமை அடைந்தேன்.

இந்த விழா மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது தமிழ்நாட்டிற்கு மட்டுமின்றி, ஒட்டுமொத்த இந்தியாவுக் கும் பெருமை என்று தொடக்க விழாவில் கலந்து கொண்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்தவர்கள் தெரிவித் தனர். நிகழ்ச்சியை வெற்றிகரமாக நடத்திய முதலமைச் சர் மு.க.ஸ்டாலின், விளையாட்டுத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், தலைமைச் செயலாளர் வெ. இறையன்பு, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத் துறை செயலாளர் அபூர்வா உள்ளிட்ட அனைத்து அதி காரிகளுக்கும், பங்களித்த கலைஞர்களுக்கும் எனது பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

## கனமழையால் காட்டாற்று வெள்ளம்; சதுரகிரியில் தவித்த 3 ஆயிரம் பக்தர்கள்

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு அருகே உள்ள மேற்கு தொடர்ச்சி மலையில் சதுரகிரி சுந்தர மகாலிங்கம் கோவில் உள்ளது. பிரசித்தி பெற்ற இந்த கோவிலுக்கு ஆடி அமாவாசையை முன்னிட்டு கடந்த 25ம் திகதி முதல் நாள் தோறும் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சென்று தரிசனம் செய்த வண்ணம் உள்ளனர். நேற்று ஆடி அமாவாசை நாளை யொட்டி அதிகாலை முதலே பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் சதுரகிரியில் குவிந்தனர். காலை 6 மணி முதல் மாலை 3 மணி வரை தொடர்ந்து பக்தர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டதால் மலை பாதைகள், சுந்தர மகாலிங்கம் கோவில்களில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. நேற்று முன்தினம் இரவு மழை பெய்ததால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மலைப் பாதைகளில் தீயணைப்பு வனத்துறையினர், பொலிஸார்அதி க அளவில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். நேற்று மாலை 3 மணியுடன் மலையேற அனுமதி மறுக்கப்பட்டது. ஆனாலும் சாமி தரிசனம் செய்ய சென்றவர்கள் தொடர்ந்து அடிவாரத்துக்கு வந்து கொண்டிருந்தனர். இதே போல் வருசநாடு மலைப்பகுதி யிலும் ஏராளமான பக்தர்கள் பயன்படுத்தினர்.

இந்த நிலையில் நேற்று இரவு சதுரகிரி மலைப்பகுதிகளில் திடீர் கனமழை பெய்தது. சுமார் 1 மணி நேரத்திற்கும் மேலாக இந்த மழை நீடித்தது. இதனால் அடிவாரத்திற்கு இறங்கிக் கொண்டிருந்த பக்தர்கள் ஒதுங்கக்கூட இடமில்லாமல் தவித்தனர். தொடர்மழை காரணமாக அங்குள்ள மாங்கனி ஓடை, சங்கிலிப்பாறை, பிலாவடி கருப்பசாமி கோவில் ஓடை களில் திடீரென காட்டாற்று வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால் பக்தர்கள் அந்தப்பகுதிகளை கடக்க முடியாமல் அங்கேயே தடுத்து நிறுத்தப்பட்டனர். நள்ளிரவு நேரத்தில் ஓடைகளில் தண்ணீர் சற்று குறைந்தவுடன் வனத்துறை, தீயணைப்பு வீரர்கள் கயிறு கட்டி பக்தர்களை அங்கிருந்து பாதுகாப்புடன் அழைத்துச் சென்றனர். கனமழை பெய்ததால் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கோவிலில் இருந்து கீழே இறங்க அனுமதி மறுக்கப்பட்டது. சுமார் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் திடீர் கனமழையால் மலைப்பாதைகளில் சிக்கும் நிலை ஏற்பட்டது. இதனால் அவர்கள் கடும் அவதியடைந்தனர். இன்று காலையும் சதுரகிரி செல்ல தாணிப்பாறை அடிவாரத்தில் ஏராளமான பக்தர்கள் திரண்டனர். ஆனால் மழை பெய் வதற்கான அறிகுறிகள் இருந்ததால் அவர்கள் அனுமதிக் கப்படவில்லை. காலை 9 மணிக்கு பிறகு பக்தர்கள் மலை யேற அனுமதிக்கப்பட்டனர்.





# கதிர்காமம் காட்டுப் பாதையில் நீர் குழாய்க் கிணறு வெட்டி வழங்கல்

## பாத யாத்திரீகர்களின் தாகம் தீர்க்க நடவடிக்கை!

(க.கிருபாகரன்)

கதிர்காமம் காட்டுப் பாதையின் குமுக்கனில் இருந்து நாவலடி வரையிலான ஏறத்தாழ 16 கிலோமீற்றர் தூரத்தைக் கடந்து செல்கையில் யாத்திரிகர்கள் குடிதண்ணீரின்றியே தாகத்துடனும், சோர்வுடனும் பயணிக்க வேண்டிய நிலை ஏற்பட்டதாக மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார்.

கடந்த 22 ஆம் திகதி உகந்தை முருகன் ஆலயத்திலிருந்து பாதயாத்திரையை ஆரம்பித்து, 24 ஆம் திகதி இந்த வழித்தடத்தை யாத்திரிகர்கள் அடைந்தனர். பாதை வழியில் குடிதண்ணீர்த் தாங்கிகள் இருந்தும், எரிபொருள்தட்டுப்பாட்டால், அவற்றுக்கான குடிதண்ணீர் போதியளவில் நிரப்பப்பட்டிருக்கவில்லை.

இந்நிலையில் போத்தல்களில் எடுத்துச் சென்ற குடிதண்ணீர் அனைத்தும் நிறைவடைந்ததால், குடிதண்ணீர் வசதியை ஏற்படுத்தும் பொருட்டு, அங்கு ஏற்கனவே திட்டமிட்டபடி, அன்னதானம் வழங்கும் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மட்டக்களப்பு மாநகரசபை பணிக்குழாத்தினருடன் கலந்தாலோசித்து, உடனடியாக குழாய்க் கிணறு ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இக்காட்டுப் பகுதியில் வாகனங்களைக் கொண்டு செல்வதிலுள்ள பிரச்சினைகள் காரணமாக அவ்விடத்தில் கிடைக்கக்கூடிய வளங்களைக் கொண்டு குளாய் கிணறு அமைக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து ஊற்றெடுக்கும் நீர் மூலம் அப்பாதையூடாகப் பயணிப்போரின் தாகத்தைத் தீர்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கதிர்காமம், உகந்தை ஆலயங்களில் இன்று கொடியேற்றத்துடன் உற்சவம்



(காரைதீவு நிருபர் சகா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கதிர்காமம் கந்தன் ஆலயத்தின் வருடாந்த கொடியேற்ற நிகழ்வு இன்று 29ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை இடம் பெற இருக்கின்றது.

இதேவேளை, உகந்தை மலை ஸ்ரீ முருகன் ஆலய கொடியேற்றமும் இன்று ஆலயபிரதம குரு சிவசிறி க.கு.சீதாராம் குருக்கள் தலைமையில் நடைபெற இருந்தது.

கொடியேற்றம் தொடங்கி தொடர்ச்சியாக15 நாள்கள் திருவிழாக்கள், பெரஹரா இடம்பெற்று எதிர்வரும் 12ஆம் தேதி கதிர்காமத்தில் தீர்த்த உற்சவம் இடம் பெறும். அதேபோன்று உகந்தை முருகன் ஆலயத்தின் தீர்த்த உற்சவம் எதிராவரும் 11 ஆம் தேதி இடம்பெற இருக்கின்றது.

இதற்கிடையில் கதிர்காமத்துக்கான காட்டுப்பாதையில் பயணிக்கும் பக்தர்கள் தொடர்ச்சியான மழையால் பாதிக்கப்பட்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து புறப்பட்ட குழுவினர் உள்ளிட்ட சுமார் 9 ஆயிரம் பாதயாத்திரை அடியார்கள் இதுவரை கதிர்காமத்தை சென்றடைந்திருக்கின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# கல்முனை மாநகர சபைக்கு புதிய ஆணையாளர் நியமனம்



(நூருல் ஹுதா உமர்)

கல்முனை மாநகர சபையின் ஆணையாளராக இலங்கை நிருவாக சேவை உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.அஸ்மி, கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

22.07.2022 திகதியிடப்பட்ட கடிதம் மூலம் 25.07.2022 ஆம் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

சமூக செயற்பாட்டாளர்கள், பல்வேறு பொது அமைப்புக்கள் கிழக்கு மாகாண ஆளுநர் மற்றும் உயர் அதிகாரிகளுக்கு முன்வைத்த குற்றச்சாட்டுகள் காரணமாக கல்முனை மாநகர சபையின் தற்போதைய ஆணையாளராக செயற்படும் எம்.சி. அன்சார், விசாரிக்கப்பட்டு கடந்த ஏப்ரல் மாதம் இடமாற்றம் செய்யப்பட்டு அந்தப் பதவிக்கு பொறியியலாளர் ரி.சிவலிங்கம் நியமிக்கப்பட்டார். எனினும், அவர் பதவியேற்காமல் பலவந்தமாக தடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதனை யடுத்து மீண்டும் எம்.சி. அன்சார், கல்முனை மாநகர ஆணையாளராகச் செயற்பட்டார்.

இந்த நிலையில், இலங்கை நிர்வாக சேவையின் முதல் வகுப்பைச் சேர்ந்தவரான அஸ்மி, கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர் பதவியிலிருந்து கல்முனை மாநகர ஆணையாளர் பதவிக்கு இடமாற்றப்பட்டுள்ளார். கல்முனை மாநகர சபையின் பதில் ஆணையாளராகவே தன்னை நியமிக்குமாறு அஸ்மி வேண்டுகோள் விடுத்த நிலையில், நிரந்தர ஆணையாளராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் அக்கரைப்பற்று மாநகர சபை ஆணையாளராக வருடங்கள் சிறப்பாக செயற்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் இறுதி நாளில் தீர்த்த உற்சவம்





கிழக்கிலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே

அமையப்பெற்ற மட்டக்களப்பு, அமிர்தகளி ஸ்ரீ மாமாங்கேஸ்வரர் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் தேர்த்திருவிழா நேற்று முன்தினம்புதன்கிழமை மிகச்சிறப்பாக இடம்பெற்றமையைத் தொடர்ந்து நேற்று தீர்த்தோற்சவம் இடம்பெற்றது. ஸ்ரீ மாமாங்கப் பிள்ளையார் பேராலயத்தின் இவ்வாண்டிற்கான மகோற்சவம் கடந்த 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி, இறுதிநாள் பிதிர்கடன் தீர்க்கும் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் ஆலய தீர்த்தக்கேணியில் திகதி பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழ மிகச்சிறப்பாக இடம்பெற்றது. வசந்த மண்டப பூசைகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து சுவாமி வெளிவீதி வலம் வருகை தந்ததைத் தொடர்ந்து, நாட்டின் பல பாகங்களிலுமிருந்து வருகைதந்த ஆயிரக்கணக்கான பக்த அடியவர்கள் தீர்த்தமாடி தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றினர்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்தியதாலேயே நாட்டில் ஆயுதப் போராட்டம் உருவாக்கப்பட்டது!

## ஜே.ஆர். விட்ட தவறை நீங்களும் விடாதீர்கள் என்கிறார் செல்வம்



அவசரகாலசட்டத்தைபயன்படுத்தியே முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தன ஆயுத போராட்டத்தை தோற்றுவித்தார். ஜனநாயக மக்கள் போராட்டத்தை தவறான நிலைக்கு கொண்டு செல்ல வேண்டாம்.

தமிழர்கள் கொல்லப்பட்ட போது எவரும் குரல்கொடுக்காமலிருந்தது கவலைக்குரியது. வெலிகடை சிறைச்சாலை படுகொலையில் கொல்லப்பட்டவர்களின் உடல்கள் எங்கே என்பதை அரசாங்கம்வெளிப்படைத்தன்மையுடன் குறிப்பிட வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்செல்வம் அடைக்கலநாதன் சபையில் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில் புதன்கிழமை இடம்பெற்ற அவசரகால சட்டத்தின் மீதான விவாதத்தின் போது உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர் ஜயவர்தனவின் ஆட்சிகாலத்தில் தான் அவசரகால சட்டம் இயற்றப்பட்டதுடன், இனப்படுகொலை ஆரம்பிக்கப்பட்டது என்பதையும் குறிப்பிட்டுக்கொள்கிறேன்.

இனப்படுகொலை 39 ஆவது வருடத்தைக் கடந்துள்ளது.வெலிகடை சிறைச்சாலையில் இனப்படுகொலையின் 39 ஆவது வருடத்தை ஜுலை படுகொலை கரிநாளாக எமது தமிழ் தேசம் நினைவு கூர்கிறது.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் ஸ்தாபகர் தங்கத்துறை குட்டிமணி அவர்களோடு மரித்த ஜகன், நடேதாசன் மற்றும் தேவன் உட்பட 53 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த விடயம் தொடர்பில் சபையில் எவரும் நினைவுபடுத்தவில்லை என்பதை கவலையுடன் தெரிவித்துக் கொண்டு,படுகொலை செய்யப்பட்ட எமது உறவுகளுக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவசரகால சட்டத்துக்கு அனுமதி வழங்கப்படவுள்ள விவாதத்தில் சிங்கள மக்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் பெரிதளவில் பேசப்படுகிறது.

சிங்கள மக்கள் தாக்கப்பட்டமை வன்மையாகத் தண்டிக்கத்தக்கது. காலி முகத்திடல் போராட்டகாரர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு ,கிழக்கு உட்பட மலையகத்தில் தமிழர்கள் போராட்டத்தில் ஈடுப்படுகிறார்கள்.

அவசரகால சட்டத்தை பயன்படுத்தி சிறையை நிரப்புவதற்காக தமிழ் இளைஞர்கள் தாக்கப்பட்டு,கைது செய்யப்பட்ட போது எவரும் குரல் கொடுக்காமலிருந்தமை கவலைக்குரியது.

தமிழர்களின் போராட்டம் பயங்கரவாதமாகக் கருதப்பட்டது. தமிழர்களின் போராட்டம் நியாயமானது என்பதை பெரும்பாலானோர் ஏற்றுக்கொண்டுள்ளார்கள்.

அவசரகால சட்டத்தை பயன்படுத்தி ஜே.ஆர் ஜெயவர்தன முறையற்ற வகையில் செயற்பட்டதை தொடர்ந்து தான் ஆயுதப் போராட்டம் ஆரம்பமானது. ஆகவே, தற்போதைய ஜனநாயக போராட்டத்தை தவறான முறைக்கு கொண்டு செல்லும் சூழலை ஏற்படுத்த வேண்டாம்.

அவசரகால சட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையாக எதிர்க்கிறது. வெலிகடை சிறைச்சாலை படுகொலை செய்யப்பட்டவர்களின் உடல்கள் எங்கு புதைக்கப்பட்டது என்பதை அரசாங்கம் வெளிப் படைத் தன்மையுடன் குறிப்பிட வேண்டும். – என்றார்.

# ஜனாதிபதி ரணிலுக்கு மக்கள் ஆசி இல்லை!

## ராஜித சேனாரத்ன சாட்டை



எதிர்க்கட்சிநாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கத்திற்குள் கொண்டு வரும் நடவடிக்கை நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அனைத்துக் கட்சி ஆட்சி அமைக்கும் நோக்கில் இந்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவுக்குசர்வகட்சி அரசாங்கமொன்றை ஸ்தாபிப்பதற்கான மக்களின் ஆசீர்வாதம் இல்லை எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அனைத்துக்கட்சிஆட்சிஅமைக்கும் போது, அதன் வேர் மக்கள் சார்புடையதாக இருக்க வேண்டும், அந்த வேர் மக்கள் விரோதமாக இருந்தால், அதில் சேரும் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் மக்கள் விரோதிகளாவர். எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# டெங்கு நோயாளர் எண்ணிக்கை நாட்டில் சடுதியாக அதிகரிப்பு!

நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் உள்ள உலக சுகாதார ஸ்தாபனத்தின் அலுவலகத்தின் உத்தியோகப்பூர்வ ருவிட்டர் பக்கத்திலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், நாட்டில் அடையாளம் காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களில் 25 வீதமானவர்கள் பாடசாலை மாணவர்கள் எனவும் குறிப்பிடப்படுகின்றது.

மேலும் டெங்கு நோயை பரப்பக்கூடிய Aedes நுளம்பு காலை 6 மணி முதல் 10 மணி வரையிலும் பிற்பகல் 3 மணி முதல் 6 மணி வரையிலும் தீவிரமாக கடிப்பதாக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

பாடசாலைகள் மூன்று வாரங்களின் பின்னர் திறக்கப்பட்டமையால், டெங்கு நோய் பரவுவதைத் தடுப்பதற்கான வழிமுறைகளை தொடர்ந்து பின்பற்றுமாறு பெற்றோர் மற்றும் பொது மக்களை இலங்கையில் உள்ள உலக சுகாதார ஸ்தாபனத்தின் அலுவலகம் கேட்டுக்கொண்டுள்ளது.

# பெருந்தொகைப் பணத்தை உண்டியல் முறையின் கீழ் பரிமாற்றிய நபர் கைது!

வெலிகம பிரதேசத்தில் உண்டியல் முறையின் கீழ் வெளிநாட்டுப் பணத்தைப் பரிமாற்றிக் கொண்டிருந்த நபரொருவரை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

வெலிகம, கல்பொக்க பிரதேசத்தில் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் இந்த நபர் சிக்கியுள்ளார்.

சட்டவிரோதமான உண்டியல் முறையின் கீழ் வெளிநாட்டுப் பணத்தை மாற்றியமைக்காக கல்பொக்க பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞன் கைது செய்யப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் பணத்தின் மொத்தப் பெறுமதி ஒரு கோடியே 67 லட்சம் ரூபாவை அண்மித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்க டொலர், யூரோ, பிரித்தானிய பவுண்ட், திர்ஹாம் உள்ளிட்ட பல வெளிநாட்டு நாணயங்கள் அந்த நபரிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

வெலிகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளனர்.

# வெலிக்கடை படுகொலை நினைவு திருகோணமலையில் அனுஷ்டிப்பு







(ஹஸ்பர்)

கறுப்பு ஜுலை 39 ஆம் ஆண்டு வெலிக்கடை இனப்படுகொலையின் நினைவஞ்சலி நிகழ்வு திருகோணமலையில் உள்ள வெலிக்கடைத் தியாகிகள் நினைவு அரங்கில் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை 5.40 மணிக்கு தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின. (ரெலோவின்) நிர்வாகச் செயலாளர் நித்தி மாஸ்டர் தலைமையில் இடம் பெற்றது.

1983 ஆம் ஆண்டு ஜுலை 25, 27 ஆம் திகதிகளில் வெலிக்கடை சிறையில் படுகொலை செய்யப்பட்ட குட்டிமணி, தங்கதுரை, ஜெகன் உட்பட 53 வீரமறவர்களுக்கும் இதன் போது நினைவுச்சுடர் ஏற்றப்பட்டு நினைவு நிகழ்வு இடம் பெற்றது. இந் நிகழ்வில் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் மூத்த உறுப்பினர் க. சிங்கம் உட்பட பலர் கலந்துசிறப்பித்தமைகுறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.07.2022இல் வெளியிடப்பெற்றது.